(52)

RND-A5

# தமிழ் நாடு அரசு

## சுருக்கம்

148830

கல்வித் தகுதி – பொதுப்பணிகளில் நியமனம் செய்ய அண்ணாமலை பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் முதலாம் ஆண்டு அடிப்படைக் கல்வி தமிழக அரசின் 11–ஆம் ஆண்டு பள்ளி இறுதிப் படிப்புக்கு சமமாக அங்கீகாரம் செய்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (ஏ) துறை

21.2.97

அ.ஆ.நிலை எண். 50      நாள் 24.2.1997.

பார்வை:

1. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரது க.எண். 212973/89 ப.தொ.1, நாள் 31.10.90.
2. அ.ஆ.நிலை எண். 441, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 20.12.1993.
3. தமிழ் நாடு தேர்வாணையச் செயலரின் க.எண் 7400/ஆர்.என்.டி.ஏ/91, நாள் 17.9.96.

........

ஆணை:

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை–5 அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நடத்தும் அடிப்படைக் கல்வி முதலாம் ஆண்டு தேர்ச்சி பெற்றவர்களை தமிழக அரசின் பள்ளி இறுதியாண்டு ( S.S.L.C. ) தேர்ச்சிப் பெற்றதற்குச் சமமாக கருதலாமா என்று அரசிடம் தெளிவுரை வழங்குமாறு கேட்டுள்ளார்.

2. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரது கோரிக்கை இதற்கென பார்வை இரண்டில் உள்ள அரசாணையில் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைக்காக தேர்வாணையத்திற்கு அனுப்பப்பட்டது.

3. தமிழ் நாடு தேர்வாணையக் குழு அலுவலகத்தில் 19.8.1996 அன்று நடந்த குழுக் கூட்டத்தில் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் முதலாம் ஆண்டு அடிப்படைக் கல்வியின் பாடத் திட்டமும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் முதலாம் ஆண்டு அடிப்படைக் கல்வியின் பாடத்திட்டமும் ஒரே மாதிரியாக இருப்பதால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் முதலாமாண்டு அடிப்படைக் கல்வி தமிழக அரசின் பதினொன்றாம் வகுப்பு இறுதிப் படிப்புக்கு ( 11 years S.S.L.C.) சமமாக கருதலாம் எனக் குழு தீர்மானித்து பரிந்துரை செய்துள்ளது. கல்வி நிறுவனங்களால் அளிக்கப்படும் பட்டப்படிப்பு, முதுநிலைப் பட்டப் படிப்பு மற்றும் பிறக் கல்வி திட்டங்களை அரசுப் பணிகளில் தேர்வாணையத்தின் வரம்பிற்குள் வரும் பணியிடங்களுக்கு நியமனம் செய்யும் கல்வித் தகுதியாக தேர்வாணையக் குழுவால் அளிக்கப்படும் பரிந்துரை, தேர்வாணையத்தின் வரம்பிற்குட்படாத அரசின் பிற பணியிட நியமனங்களுக்கும் பொருந்தும் என தேர்வாணையச் செயலர் தெரிவித்துள்ளார்.

/த.பி.பா/

4. குழுவின் பரிந்துரைகளை அரசு தீவிர பரிசீலனை செய்து, பரிந்துரையை ஏற்றுக்கொள்வது என அரசு முடிவெடுத்துள்ளது. அவ்வாறே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் முதலாமாண்டு அடிப்படைக் கல்வித் தகுதியை ( Foundation Course I Year ) தமிழக அரசின் பதினொன்றாம் வகுப்பு இறுதிப்படிப்புக்கு ( 11 years S.S.L.C.) சமமாக கருதி பொதுப் பணிகளில் வேலை வாய்ப்பிற்காக அரசு அங்கீகரிக்கிறது.

( ஆளுநரின் ஆணைப்படி )

பெ. பாஸ்கரதாஸ்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

அனைத்துச் செயலர்கள், தலைமைச் செயலகத் துறைகள், சென்னை-9
அனைத்துத் துறைத் தலைமை அலுவலர்கள்
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், சென்னை-10
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2
பதிவாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலை நகர் (அஞ்சல்) -608002.

நகல்:

அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகள், சென்னை-9
அனைத்துப் பிரிவுகள், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.